முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 10.02.2026.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 109/2024**

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வரலட்சுமி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| க/பெ | : | ராஜி | வயது | : | 51 |
| ஊர் | : | செய்யாறு | தொழில் | : | இல்லத்தரசி |

**வா.சா. 1 (வரலட்சுமி): வாதி தரப்பில் முதல் சாட்சியின் முதல் விசாரணை தொடர்ச்சி:**

ஏற்கனவே எனது பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1. 1ம் வாதியின் பெயரில் வழங்கப்பட்டுள்ள மின் கட்டண ரசீது அசல் (எண்ணிக்கை 6) **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பி.சி. சண்முகம், பி.சி ராஜி அவர்களின் பெயர்களில் செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீது (எண்ணிக்கை 4) அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(கற்றறிந்த எதிர்தரப்பு வழக்கறிஞர் வாசாஆ.1, 2 ஆக குறியீடு செய்யப்பட்ட ஆவணமானது வழக்கு சொத்துக்கு சம்மந்தமில்லாத மின் கட்டண, சொத்து வரி ரசீதுகள் ஆகும் என ஆட்சேபணை செய்தார்.

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.02.10 18:33:46 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு